4. வரவு–செலவுத் திட்டம், 2018–2019, பொது விவாதம்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018–2019 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம். (குறுக்கீடுகள்) விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. உதயசூரியன், பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

2. தகவல் கோரல்–*தொடர்ச்சி*

ராம ராஜ்ய ரத யாத்திரையை தமிழகத்தில் அனுமதித்தது குறித்து–*தொடர்ச்சி*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இதைத் தவிர எனக்கு, (குறுக்கீடுகள்) எவ்வளவுதான் உங்களிடத்திலே என்னுடைய வேண்டுகோளை வைக்க முடியும். (குறுக்கீடுகள்) எவ்வளவுதான் வேண்டுகோளை வைத்தாலும் நீங்கள் செவி சாய்க்காமல் இப்படிச் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) அவையை நடத்த விடுங்கள். (குறுக்கீடுகள்) அவையை நடத்த எனக்கு அனுமதி கொடுங்கள். (குறுக்கீடுகள்) இப்படிச் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) எனக்கு வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்).

முற்பகல் 11–35

அவையை நடத்த நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) மீண்டும் மீண்டும் உங்களை நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) மீண்டும் மீண்டும் நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) எனக்கு அவையை நடத்துவதற்கு வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) உங்கள்மீது நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லாத நிலைக்கு என்னைத் தள்ள வேண்டாம். (குறுக்கீடுகள்) நான்